**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **D.W.2** | **பெயர் : திரு. ஹெர்பான்சிங் பிரேம்குமார்**<br>**த/பெ : திரு. தேவ ஆசீர்வாதம்** | **OS.No. 38/2023** | **17.03.2026** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பில் பி.வா.சா.2 ன் குறுக்கு விசாரணை)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் 1ம் பிரதிவாதி. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் வாதி தாக்கல் செய்துள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதி அருள்ராஜைப்பற்றி எனக்கு ஏதேனும் விவரங்கள் தெரியுமா என்றால் அவர் ஆசிரியர் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதிக்கும் எனக்கும் ஏற்கனவே கல்வி நிறுவனங்கள் சம்பந்தமாக பிரச்சனைகள் இருந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நஷ்டஈடு கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

நான் கூறிய தகவலின் அடிப்படையில்தான் எதிர்வழக்குரையும் நிரூபண வாக்குமூலமும் தயார் செய்யப்பட்டன. வாதி என் மீது சாத்தான்குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்து, அது மனு ரசீது எண்.146/2023 ஆக பதிவு செய்யப்பட்ட விவரம் உண்மையா என்றால் உண்மைதான். வா.சா.ஆ.1 ஆவணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காவல் நிலையத்தில் வாதி கொடுத்த புகார் சம்பந்தமாக நானும் நவநீதகிருஷ்ணனும் ஆஜர் ஆனோம் என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் வாதி அளித்த புகார் மனுவை என்னிடம் காட்டவில்லை. வாதி கொடுத்த புகாரின்பேரில் காவல் ஆய்வாளர் விசாரணை செய்து என்னிடமும் நவநீதகிருஷ்ணனிடமும் வாக்குமூலம் பதிவு செய்து அது இந்நீதிமன்றத்தால் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்று சொன்னால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1ல் உள்ள எனது வாக்குமூலத்தில் விளம்பர பதாகையானது எங்களால் யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டுமென்ற கெட்ட நோக்கத்தோடு வைக்கப்பட்டதல்ல. அந்த விளம்பர பதாகையை நாங்கள் கூறியதால்



SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.03.17 20:58:37 +0530

வைக்கப்பட்டது கிடையாது என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது, ஆனால் அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னுடையது அல்ல. வாக்குமூலத்தை நான்தான் எழுதினேன் என்று சொன்னாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் விசாரணைக்காக எங்கள் கூட்டாளியாளர் எங்களிடம் கேட்காமல் எங்கள் பெயரை போட்டு வைத்துள்ளார் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டோம் என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் ரசீது எண்146/2023 பதிவு செய்யப்பட்டது தவறு என்று நான் போலீஸ் உயர் அதிகாரியிடம் புகார் அளித்தேனா என்றால் இல்லை.

விளம்பர பதாகைகளை வேறு யாராவது வைத்திருப்பார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. விளம்பர பதாகைகளை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. விளம்பர பதாகையை நான் பார்க்கவில்லை என்றும் அதை நான் வைக்கவில்லை என்றும் நான் எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் கூறி உள்ளேனா என்றால் கூறவில்லை. எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் பொய்யான சங்கதிகளை நான் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விளம்பர பதாகைகளை நாங்கள் வைக்கவில்லை என்று நான் காவல் நிலைய உயர் அதிகாரியிடம் புகார் அளித்தேனா என்றால் அளிக்கவில்லை, நாங்கள் விளம்பர பதாகையை வைக்கவில்லை என்பதால் அதை நாங்கள் பெரிதாக கண்டுகொள்ளவில்லை. விளம்பர பதாகைகளை நாங்கள்தான் வைத்தோம் என்று சொன்னாலும் அதனால்தான் காவல் நிலைய உயர் அதிகாரியிடம் புகார் அளிக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள விளம்பர பதாகையில் என்னுடைய பெயர் உள்ளது என்று சொன்னால் சரிதான்,ஆனால் நாங்கள் எந்த விளம்பர பதாகையையும் வைக்கவில்லை. வாதி அவராகவே விளம்பர பதாகையை வைத்து என்னுடைய பெயரை அதில் குறிப்பிட்டு இருக்கலாம். வாதி அவராகவே விளம்பர பதாகையை வைத்திருக்கலாம் என்று கருதி நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை, தற்போது தான் வாதி விளம்பர பதாகையை வைத்திருக்கலாம் என்று சந்தேகம் வந்துள்ளது.



SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.03.17 20:58:46 +0530

நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை 8 வது பத்தி மற்றும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 8 வது பத்தி கடைசி வரியில் "இந்த தாவா விசயம் சமரச முயற்சிக்கு பலன் அளிக்காமல் போய் விட்டது என்றும், பிராதில் கூறி உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா வழக்கை நான் சமரச பேச்சிற்கு முயற்சி செய்தேனா என்றால் நாங்கள் இந்த வழக்கில் கூறி உள்ளவாறு விளம்பர பதாகையை நாங்கள் வைக்கவில்லை என்பதால் எந்தவித சமரச பேச்சுவார்த்தையிலும் நாங்கள் ஈடுபடவில்லை. நான் அரசியல் கட்சியில் உள்ளேனா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் 10 வது பத்தியில் "வாதி எங்கள் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எங்கள் பெயரை பதாகையில் வைத்துவிட்டு எங்கள் மீது வீண் புகார் கூறுகிறார்" என்று நான் கூறி உள்ளேனா என்றால் சரிதான். வாதி களங்கம் ஏற்படுத்தி விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் விளம்பர பதாகையை நாங்கள் வைக்கவில்லை என்பதால் நாங்கள் அதை பெரிதாக கண்டுகொள்ளவில்லை. நான் கல்வித்துறையில் இருப்பதால் புகார் அளித்துவிட்டு அதை பின்தொடர எனக்கு நேரமில்லை.

எனது பெயரில் யார் விளம்பர பதாகை வைத்தார் என்று உண்மை நிலையை அறிந்து கொள்ள நான் முயற்சி செய்தேனா என்றால் நான் முயற்சி செய்யவில்லை. நான் எனது ஆசிரியர் பணியில் 3 ஆண்டுகளுக்கு முன்பு பணி இடைநீக்கம் செய்யப்பட்டேனா என்றால் இல்லை. என் மீது கல்வித்துறையில் துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னால், 2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்டது. விசாரணை முடிவில் எனக்கு ஒரு வருட வருடாந்திர ஊதிய உயர்வு மட்டும் ரத்து செய்யப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.03.17 20:58:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.